பிரித்தானிய பாராளுமன்றத்தின் முன்பாக உள்ள பாராளுமன்ற சதுக்கத்தில் இன்று 19-11-2008 புதன்கிழமை மாலை 3.30 முதல் மாலை 6.30 வரை இடம்பெற்ற கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஆயிரக்கணக்கானவர்கள் கலந்து கொண்டனர். பெரும்பாலான தமிழர்களும் பிரித்தானியாவிலுள்ள சில அரச சார்பற்ற அமைப்புக்களின் பிரதிநிதிகளும் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர். இன்று பிரதமருடனான கேள்வி நேரம் என்பதனால் இன்றைய தினம் அதிகளவான பாராளுமன்ற உறுப்பினர்கள் பாராளுமன்றத்திற்கு வருகை தருவார்கள் என்பதனால் இன்றைய தினம் அதிகளாவான பாராளுமன்ற உறுப்பினர்களின் கவனத்தையீர்ப்பதற்காக இன்றைய தினம் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தது.

பிரித்தானியாவின் தற்போதைய குளிரான காலநிலையிலும் பெரும்பாலான மக்கள் இந்த கவனயீர்ப்பு நிகழ்வில் கலந்து கொண்டதுடன் பாடசாலை சிறுவர்கள் மற்றும் குழந்தைகளுடனும் பலர் இதில் கலந்து கொண்டிருந்தனர்.

மூன்று முக்கிய நோக்கங்களைக் கொண்டதாக இந்த கவனயீர்ப்பு நிகழ்வு அமைந்தது.

- ஸ்ரீலங்கா அரசினால் மேற்கொள்ளப்படும் தமிழின படுகொலையை தடுத்து நிறுத்துமாறு பிரித்தானிய அரசு வற்புறுத்த வேண்டுமென கோருவது,
- ஸ்ரீலங்காவில் தமிழர் தாயக பிரதேசங்களில் தமிழர்களின் சுயநிர்ணய உரிமையை பிரித்தானிய அரசு அங்கீகரிக்க கோருவது,
- தமிழக மக்களோடு தோளோடு தோள் நின்று, தமிழின எழுச்சிக்கு ஒத்துழைக்கும் தமிழக மக்களக்கு நன்றி தெவிப்பது, ஆகிய நோக்கங்களைக் கொண்டதாக அமைந்திருந்தது.

பிரித்தானியாவின் வெவ்வேறு அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளும் இதில் கலந்து கொண்டு தமது ஆதரவை வெளிப்படுத்தியதுடன் அங்கிருந்த மக்கள் மத்தியில் தமது கருத்துக்களையும் பகிர்ந்து கொண்டு பிரித்தானிய தமிழர்களின் கோரிக்கைகளுக்கு ஆதரவை வெளிப்படுத்தினார்கள். பாராளுமன்ற உறுப்பினர்களான கீத் வாஸ், தமிழர்களுக்கான அனைத்துக் கட்சிக் குழுவின் தலைவரான விரேந்திர சர்மா, சியோப்கெயின் மக்டொனா, சுசான் கிரைமர், அன்ரூ பெலிங், ரொம் பிரேக், ஜோன் ரையன், பரிகார்டினர் போன்ற பாரளுமன்ற உறுப்பினர்கள் அங்கு உரைநிகழ்த்தினர்.

தமிழர்களுக்கு ஆதரவு தெரிவித்து டிரம் வாத்திய இசை முழங்கப்பட்டது. ஸ்ரீலங்காவில் உள்ள தமிழர்களுக்கு என தனியான தமிழீழ தனியரசு உருவாக்கப்பட வேண்டும் என்ற பிரித்தானிய தமிழர்களின் விருப்பம் வெளிப்படுத்தப்பட்டது. ஸ்ரீலங்கா அரசினால் தமிழர்களுக்கு எதிராக இழைக்கப்படும் கொடு:மைகள் தொடர்பாகவும் அங்குள்ள தமிழ் மக்களின் அவல நிலை தொடர்பாகவும் பிரித்தானிய பொது மக்களுக்க எடுத்து விளக்கும் வகையிலான துண்டுப் பிரசுரங்களும் அங்கு விநியோகிக்கப்பட்டது.

அங்கு தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளிலான பதாகைகள் வைக்கப்பட்டிருந்தன. அவற்றில் ஆங்கில மொழிகளிலான பாதாகைகளில் இருந்த சுலோகங்களில் சில:

ஸ்ரீலங்காவில் தமிழர்கள் மீதான இனப்படுகொலையை நிறுத்து

தமிழர்களின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரி

தமிழ்நாட்டுக்கு நன்றி – பிரித்தானிய தமிழர்

சிறந்த தேசம் - தமிழ்நாடு
நன்றியுள்ள மக்கள் - தமிழீழ மக்கள்

அப்பாவித் தமிழர்கள் மீதான குண்டு வீச்சை நிறுத்து

ஸ்ரீலங்கா ஒரு பயங்கரவாத அரசு

**பிரித்தானியா**
ஸ்ரீலங்கா அரசு மீது பொருளாதார தடையை விதி

**ஐநா**
ஸ்ரீலங்கா மீது ஆயுத தடையை விதி

**ஐரோப்பிய ஒன்றியம்**
ஜீ.எஸ்.பீ. பிளஸ் - யுத்த நிதிக்கான வழி